# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.62 of 2021 | **PW - 1** | : | Cross |
| **Name** | சுதா | **Husband Name** | : | சின்னன்னன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 29.10.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 2.55 PM

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும். இரண்டாம் வாதி சுரேஷ் மற்றும் எனது தாய் ஆகியோர் வெப்பாலம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகின்றனர் எனது அம்மா இறந்து விட்டார் எனது திருமணத்திற்கு முன்பு வரை நானும் அங்கு தான் குடியிருந்து வந்தேன்.

2. நானும் எனது அம்மாவும் சேர்ந்து குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஊத்தங்கரையில் எம்.சி 4 / 1993 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை எனது அம்மா தாக்கல் செய்தாரா என்று தெரியாது. எனது தரப்பில் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் என்ன ஆவணம் என்றால் அது என்ன ஆவணம் என்று எனக்கு சரியாக புரியவில்லை. நீங்கள் தாக்கல் செய்த மேற்படி மனு கடந்த 14.11.1994 தேதியில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை ஊரில் பேசி பைசல் செய்து கொண்டதாக எனது அம்மா வழக்கை நடத்தவில்லை என்று தெரிவித்தார். நான் சொல்வது தவறு எனது அம்மாவிற்கு எதிராக அந்த மனுவில் வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து எனது அம்மா மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் சீராய்வு மனு எண் 54 / 1995 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. அந்த மனுவானது 19.04.1996 தேதியில் முழுமையான விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த சீராய்வு மனுவின் உத்தரவை எதிர்த்து நானும் எனது தம்பியோ அல்லது எனது அம்மாவோ ஏதாவது மேல்முறையீடு செய்தோமா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ 11 ஆவணத்தில் ராமானுஜம் என்பவர் எனது அம்மாவிற்கும் அவருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றுதான் எதிருரை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் வா.சா.ஆ 11 ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. ஊரில் பைசல் ஆனதாக கூறியுள்ளேன் என்ன பைசல் செய்யப்பட்டது என்றால் நான் சிறுபிள்ளையாக இருந்ததால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளையும் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன். என்னுடைய வழக்கிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் எனது அம்மாவிற்கும் ராமானுஜம் என்பவருக்கும் பெரியோர்கள் நிச்சயத்தை திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது அம்மா தாக்கல் செய்த ஜீவனாம்சம் மனுவில் அவர்கள் இருவருக்கும் காதல் திருமணம் நடைபெற்றதாக கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இருவருக்கும் திருமணமே நடைபெறவில்லை என்பதால் தான் நானும் எனது அம்மாவும் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட சங்கதிகளை கூறியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

4. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு. எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் கைலாயபுரம் முருகர் கோயிலில் திருமணம் நடைபெற்றது. அங்கு திருமணம் நடைபெற்றால் திருமணத்தின் பதிவு சான்று வழங்குவது வழக்கம் என்றால் கொடுத்து இருப்பார்கள் அது எனது அம்மாவிடம் இருக்கும். திருமணத்திற்கு புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள் அது ஒரு விபத்தில் காணாமல் போய்விட்டது. அந்த போட்டோ காணாமல் போய்விட்ட பிறகு போட்டோ ஸ்டுடியோவில் சென்று அந்த போட்டோவை மீண்டும் வாங்குவதற்கு ஏதாவது முயற்சி எடுத்தேன் என்றால் இல்லை. எனது அப்பாவின் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாக நான் கூறுவது தவறு திருமண புகைப்படத்தை தாக்கல் செய்தால் அதில் எனது அப்பா இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் திருமண சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. எனது தம்பிக்கு ஒரு வருடம் முன்பு திருமணம் ஆகிவிட்டது. வா.சா.ஆ. 10 ஆவணத்தில் உள்ள புகைப்படம் ராமானுஜத்தின் புகைப்படமே இல்லை இந்த வழக்கிற்காக அதை மோசடியாக தயாரித்து உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டையில் எனது தந்தை பெயர் இல்லை என்று சொன்னால் இல்லை எனது கணவர் பெயர் தான் உள்ளது. எனது அம்மா மற்றும்

தம்பியின் வாக்காளர் அடையாள அட்டைகளை தாக்கல் செய்துள்ளது மோசடியாக வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள மாற்றுச் சான்றிதழ்களில் எனது அப்பாவின் கையொப்பம் எங்கும் இல்லை என்று சொன்னால் சரிதான் அம்மா கையொப்பம் தான் உள்ளது. எனது திருமணம் ராமானுஜம் என்பவரின் முன்னிலையில் நடைபெறவில்லை அவர் முன்னிலையில் நடைபெற்றதாக வா.சா.ஆ. 8 ஆவணத்தை நாங்கள் மோசடியாக தயார் செய்து கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

6. வா.சா.ஆ 12 மற்றும் வா.சா.ஆ. 13 அசல் வழக்கு எண் 4/ 2016-இல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பணை தாக்கல் செய்துள்ளேன் அந்த வழக்கு முழு விசாரணைக்கு பின்பு எதுவும் தள்ளுபடி செய்யப்படவில்லை என்று சொன்னால் அந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும் அது விசாரிக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 13 ஆவணத்திலேயே அது தவறுதலால் தள்ளுபடி செய்யப்பட்டதாக உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாக்காளர் பட்டியலில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் பெயரும் வரிசையாக தான் இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 14 வாக்காளர் பட்டியலில் ராமானுஜம் பெயர் 325-வது இடத்திலும் எனது அம்மாவின் பெயர் 481 வது இடத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். காட்டேரி கிராமத்திற்கும் வெப்பாலம்பட்டி கிராமத்திற்கும் ஒரே சட்டமன்ற தொகுதி தான் என்று சொன்னால் சரிதான். எனது அம்மா தாக்கல் செய்த ஜீவனாம்சம் மனுவிலும் நான் தாக்கல் செய்துள்ள வாக்காளர் பட்டியலிலும் ராமானுஜத்தின் முகவரி காட்டேரி கிராமம் என்று தான் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது அம்மாவும் நானும் நிரந்தரமாக வசித்து வந்தது வெப்பாலம்பட்டி கிராமத்தில் தான் என்று சொன்னால் சரிதான்.

7. ராமானுஜம் இறக்கும் வரையில் எங்களை நல்ல முறையில் பராமரித்து வந்தார் என்று இந்த வழக்கில் கூறியுள்ளேன் அவ்வாறான நிலையில் எனது அம்மா எதற்காக அவருக்கு எதிராக ஜீவனாம்சம் மனு தாக்கல் செய்தார் என்றால் அது எனது அம்மாவிற்கு தான் தெரியும். நான் சொல்வது முழுவதும் பொய்யானது அதனால் தான் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்களை முன் வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எனது அம்மாவிற்கும் ராமானுஜத்திற்கும் மட்டுமே திருமணம் நடைபெற்றது என்று நான் கூறியுள்ளேன் ஆனால் எனது அம்மா தாக்கல் செய்த ஜீவனாம்சம் மனுவிலேயே 1 ஆம் பிரதிவாதிக்கும் ராமானுஜத்திற்கும் திருமணம் நடைபெற்று 2, 3 பிரதிவாதிகள் அவர்களின் வாரிசுகளாக பிறந்தனர்

என்பதை அவர் ஒப்புக்கொண்டு உள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எனது அம்மா தாக்கல் செய்துள்ள ஜீவனாம்சம் மனுவிலேயே எனது அம்மாவிற்கும் ராமானுஜத்திற்கும் திருமணம் நடைபெறவில்லை நானும் எனது தம்பியும் அவரின் வாரிசுகள் இல்லை என்று முடிவு கண்டு தான் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த உத்தரவிலேயே ராமானுஜத்திற்கு ஒண்ணாம் பிரதிவாதி மனைவி என்றும் 2,3 பிரதிவாதிகள் மக்கள் என்றும் முடிவு காணப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கும் எனது தம்பிக்கும் நன்கு தெரியும் தெரிந்தும் 1 முதல் 3 பிரதிவாதிகளை மிரட்டி அக்கிரமலாபம் அடைய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. முன்னதாகவே அதிகாரம் வாய்ந்த நீதிமன்றம் எனது அம்மாவிற்கும் ராமானுஜத்திற்குமான உறவு குறித்து தீர்வு காணப்பட்டுள்ளதால் இந்த வழக்கு முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிப்படைய கூடியது என்று சொன்னால் சரியல்ல. பொய் வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை அலைக்கழித்து வருவதால் அவர்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 03.30 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXX

District Munsif(FAC),
Uthangarai.